**செய்தி வெளியீடு எண்: 997** **நாள்: 12.11.2010**

<u>பொதுத் (தேர்தல்கள்–2) துறை</u>

<u>செய்தி வெளியீடு</u>

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம், 2011–இல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கல் / திருத்தல் / இடம் மாற்றுதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை அளிப்பதற்கான கால அவகாசம் 13–11–2010 (சனிக்கிழமை) அன்றுடன் முடிவடைகின்றது.

2. 13–11–2010 (சனிக்கிழமை) அன்று எல்லா நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களிலும் (அதாவது பெரும்பாலும் பள்ளிக் கட்டடங்களில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. அந்த சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் / நீக்கல் / திருத்தல் / இடம் மாற்றுதல் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கிடைக்கும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அங்கேயே அளிக்கலாம். பொதுமக்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு விண்ணப்பங்களை நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் அளிக்கலாம்.

தலைமைத் தேர்தல் அதிகாரி,
தமிழ்நாடு

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**